# நடப்பு நிகழ்வுகள்- மார்ச் 15 - 2018

- **”உலக நுகர்வோர் தினம்” (World Consumer Rights Day) - மார்ச் 15.**
  இதன் நோக்கம் : **“நியாயமான டிஜிட்டல் சந்தைகளை உருவாக்குதல்”** (Making Digital Marketplaces Fairer))

- ஜெர்மனி நாட்டின் தலைநகரமான பெர்லினில் அமைந்துள்ள மெஸியில் நடைபெறும் **“சர்வதேச சுற்றுலா கண்காட்சி – ஐ.டி.பி 2018”** கண்காட்சியில் ஆஸ்திரேலியா மற்றும் ஓசியானியா பிரிவில் இந்தியாவிற்கு சிறந்த கண்காட்சி விருது (Best Exhibitor Award for Australia and Oceania Category) கிடைத்துள்ளது.

- **“தமிழ்நாடு சுற்றுலா விருது 2018”** சுற்றுலா தொடர்பான செய்திகளை சிறப்பாக வெளியிட்டதற்காக **“தினமலர்”** நாளிதழுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- இங்கிலாந்தைச் சேர்ந்த இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் (வயது 76) மார்ச் 14 அன்று மரணமடைந்தார்.

- மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் **“லக்சையா (LaQshya)”** என்ற திட்டத்தை அறிவித்துள்ளது. இது கர்ப்பிணி பெண்களுக்கான தொழிலாளர் அறை மற்றும் மகப்பேறு அறுவை சிகிச்சை அரங்கம் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டம் ஆகும். (‘LaQshya’, aimed at improving quality of care in labour room and maternity Operation Theatre).

- **”AYUSH QOL-2C” - என்ற பெயரில் கேன்சர் நோயாளிகளின் ஆரோக்கியத்தை மேம்படச் செய்வதற்காக, இந்தியாவினால் புதிதாகக் கண்டுபிடிக் கப்பட்டுள்ள ஆயுர்வேத மருந்து.** இந்த மருந்தை மத்திய ஆயுர்வேத அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கவுண்சில் (Central Council for Research in Ayurvedic Sciences (CCRAS)) உருவாக்கியுள்ளது.

- **மல்யுத்தப் போட்டியில் ஆசிய சாம்பியனாகவுள்ள இந்திய பெண்ணான நவ்ஜோத் குமார், 65கிலோ பிரிவில், உலக தரப்பட்டியலில் இரண்டாமிடத்திற்கு** முன்னேறியுள்ளார்.

- **தேசிய “டிரையத்தான்”** சாம்பியன்சிப் போட்டியில் (National Triathlon Championship) ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் முறையே பிஷ்வர்ஜித் சிங், சமீரா ஆப்ரஹாம் ஆகியோர் தங்கம் வென்றுள்ளனர். விஷாகப்பட்டணத்தில் நடைபெற்ற இந்த டிரையாத்தான் விளையாட்டு போட்டியானது, 1.5 கி.மீ நீச்சல், 40கி.மீ. மிதிவண்டி, 10கி.மீ. ஓட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

- மலேசியாவின் ‘இப்போ’ நகரில் நடைபெற்ற **27 வது சுல்தான் அஷ்லான் ஷா ஆண்கள் ஹாக்கி போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி** பெற்றுள்ளது

- இங்கிலாந்தைச் சேர்ந்த இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் (வயது 76) மார்ச் 14 அன்று மரணமடைந்தார்.

- நாட்டின் மக்களாட்சி சார்ந்த வளர்ச்சித் திட்டங்களை விவாதிப்பதற்காக வரும் மார்ச் 17 அன்று ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் மக்களாட்சி விழா கொண்டாடப்படவுள்ளது.

- நேபாளத்தில் முதலாவது பெண் குடியரசுத் தலைவர் திருமதி வித்யா தேவி பண்டாரி 2வது முறை அந்தப் பதவிக்கு மிகப்பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- கர்நாடக மாநிலம் பெலகாவி மாவட்டத்தில் மிகப்பெரிய கோட்டை ஏரி உள்ளது. அந்த ஏரிக்கரையில் இந்தியாவிலேயே மிகவுயரமான (365அடி) தேசியக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. மாநில அமைச்சர் ரமேஷ் ஜார்கிஹோளி இந்த தேசியகொடியை ஏற்றிவைத்தார்.

- மொரிசியஸ் தலைநகரான போர்ட் லூயிஸில் மார்ச் 13 அன்று குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் உலக ஹிந்தி செயலாக்கத்தை தொடங்கிவைத்தார். இதற்கான முழு நிதியுதவியும் (ரூ33 கோடி) இந்தியாவால் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடத்துக்கான அடிக்கல்லை 2015-ம் ஆண்டில் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

- போஷான் அபியான் திட்டத்தின்கீழ் நடைபெறும் அனைத்து ஊட்டச்சத்து தொடர்பான செயற்பாடுகளுக்கும் உச்சநிலை அமைப்பான நிர்வாகக்குழு தனது முதலாவது கூட்டத்தை மார்ச் 13 அன்று நடத்தியது. இக்குழுவிற்கு ராகேஷ் ஸ்ரீவஸ்தவா தலைமைதாங்கினார்.